**<u>ADM COURT, SANKARANKOVIL</u>**

**தேதி 09.07.2026**

**சி.சி.எண். 176/2024**

**<u>அ.சா.7 (ஜானகி) மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு ஆவணங்களில் அ.சா.1 க்கும் எதிரிக்கும் 15.03.2016 ம் தேதி திருமணம் நடந்ததாக துலங்குமா என்றால் துலங்காது. 30.06.2002 ல் அ.,சா.1 க்கும் எதிரிக்கும் இடையில் திருமணம் நடைபெற்றதாக துலங்கும். அ.சா.1 என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் அவரது தாயாருக்கு புற்றுநோய் ஏற்பட்டதாகவும் அதனால் சென்னைக்கு சென்றதாகவும் கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. அ.சா.1 எனது விசாரணையில் அவரது கணவர் வீட்டிலும் அவரது தாயார் வீட்டிலும் மாறி மாறி குடியிருந்து வந்ததாக கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். எனது விசாரணையில் அ.சா.1 2014 ம் வருடம் அவரது தாயார் இறந்துவிட்டதால் அவர் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டதாக கூறினாரா என்றால் இல்லை. எதிரி முதலாவதாக ஒரு திருமணம் செய்ததை மறைத்து அ.சா.1 ஐ திருமணம் செய்து கொண்டதாக காண்பிக்கும் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரியின் பெற்றோர் இறந்ததற்கான திதி கொடுக்க வரும்போது எதிரி அ.சா.1 ஐ இரண்டாவதாக திருமணம் செய்து கொண்ட விபரம் தெரிய வந்தது என்று அ.சா.1 என்னுடைய விசாரணையில் கூறினாரா என்றால் கூறினார். அ.சா.3 வைரமுத்து என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் எதிரி ராஜாமோகன் வேலைக்கு போகாமல் தினசரி குடித்துவிட்டு வந்து அவரது தங்கையை அடித்து கொடுமை செய்தார் என்றும், கொடுமை சம்பந்தமாக

1ம் எதிரி ராஜாமேகனின் உடன் பிறந்த சத்தியமூர்த்தியிடம் சொன்னபோது சத்தியமூர்த்தி அவர்களிடம் எதிரி அப்படித்தான் இருப்பதார் என்றும் அவரை திருத்த முடியாது என்றும் சொன்னதாக என்னிடம் கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். அ.சா.3 வைரமுத்து எனது விசாரணையில் எதிரி ராஜாமோகன் அடிக்கடி குடித்து விட்டு வந்து அவரது தங்கையிடம் சண்டை போடுவதும், கத்தியை கொண்டு மிரட்டுவதையும் வழக்கமாக கொண்டிருந்தார் என்று கூறினாரா என்றால், எதிரி குடித்துவிட்டு அ.சா.3ன் தங்கையிடம் சண்டை போடுவதாக கூறினார். கத்தியைக் கொண்டு மிரட்டியதாக அ.சா.3 கூறவில்லை. நான் முதல் விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் அரசு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றாலும், பின் யோசனைக்கு பிறகு இவ்வழக்கின் கோப்புகள் என்னால் தயார் செய்யப்பட்டவை என்றாலும் சரயில்ல. 1ம் எதிரி செய்ததாக சொல்லும் முதல் திருமணம் எப்போது நடைபெற்றது என்று எனது விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். அ.சா.1 இவ்வழக்கின் விசாரணை நிலுவையில் இருந்த போது சக்தி என்பவரை திருமணம் செய்து அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததாக எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும், இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.